பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஞு மார்கழி மீ 20 உ வெள்ளிக்கிழமை (04-01-1991) UTHAYAN — A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 39

# அரச தரப்பினர் ஏழு நாட்களுக்கு தாக்குதல் நடவடிக்கை நிறுத்தம்!

## நிபந்தனைகள் அனுசரிக்கப்பட்டால் மேலும் நீடிக்கப்படும் என அறிவிப்பு

### பேச்சு நடத்தவும் முன் நிபந்தனை விதிப்பு

கொழும்பு, ஜன. 4

இன்று அதிகாலை முதல் ஏழு நாட்களுக்கு விடுதலைப் புலிக ளுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளை (Offensive Operations) அரசபடைகள் நிறுத்தியிருப்பதாக அரசாங்கம் நேற்று அறிவித்தது.

இந்த இராணுவ நடவடிக்கை நிறுத்தம் தொடர்பாக அரசாங் கம் விதித்திருக்கும் நிபந்தனைகள் தொடர்ந்து அனுசரிக்கப்பட்டால் இராணுவ நடவடிக்கை நிறுத்தத்தை தொடருவது பற்றி அரசு பரி சீலனை செய்யும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கும் அரசாங்கப் முன்நிபந்தனை விதித்திருக்கிறது,

இது தொடர்பாக அரசு நேற்று விடுத்த உத்தியோக பூர்வ அறிக்கையில் தெரிவிக் கப்பட்டிருப்பதாவது:-

விடுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்த அறிவிப்பை அரசு கவன மாகப் பரிசீலனை செய்தது.

இந்த வன்செயல் தவிர்ப்பை (Cessation of Violence) அரசு வரவேற் கிறது.

தமிழீழத்தில்சகஜநிலையை ஏற்படுத்தவே போர் நிறுத் தம் பிரகடனப்படுத்தப்பட்ட தாக விடுதலைப் புலிகள் கூறியுள்ளனர்.

ஸ்ரீலங்கா எல்லைக்குள் தமிழ் ஈழம் என்று ஒன்று இருப்பதாகக் கூறப்படு

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ஜனாதிபதிக்கு அபிப்பிராயம் கூற சு. க. உட்பட 6 கட்சிகள் மறுப்பு

கொழும்பு, ஜன. 4

விடுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்ச போர் நிறுத்த அறிவிப்பு குறித்து ஜனாதி பதி பிரேமதாஸா அங்கீகரிக் கப்பட்ட அரசியல்கட்சிகளின் அபிப்பிராயங்களைக் கோரி யிருந்தார் அல்லவா!

அக்கோரிக்கையை ஏற்று ஜனாதிபதியைச் சந்தித்து, போர் நிறுத்த அழைப்பை ஏற்றுக்கொள்வதா, வேண் டாமா என்பது பற்றி தாம் கருத்துக் கூறப்போவதில்லை என்று சுதந்திரக்கட்சி உட்பட ஆறு அரசியல் கட்சிகள் நேற்று அறிவித்து விட்டன.

எதிர்க்கட்சிகளின் இத் தகைய அறிவிப்பினால் விடு தலைப் புலிகளுடன் போர் நிறுத்தம் செய்வதா அல்லது வேண்டாமா என்பது குறித்து சொந்தமாக முடிவெடுக்கும் நிலைக்கு ஜனாதிபதி தள்ளப் பட்டார் என்று செய்தியா ளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகா ணத்தில் சிலகட்சிகள் இயங்க விடுதலைப் புலிகள் அனு மதிக்கவேண்டும் என்றும்-

வடக்கு - கிழக்கில் சிவில் நிர்வாகம் இயங்க விடுதலைப் புலிகள் வழிவிடவேண்டும்என் றும்-

அப்போதுதான் பேச்சு வார்த்தை அர்த்தமுள்ளதாக அமையும் என்றும் லங்கா சமசமாஜக் கட்சி கருத்துத் தெரிவித்துள்ளது. [உ-எ,

## ஆயுதம் களையுமாறு நிபந்தனை விதிக்க கோருகிறது சுதந்திரக் கட்சி

கொழும்பு, ஜன. 4

சண்டை நிறுத்த பிரகட னத்தைஏற்றுக்கொள்வதற்கு முன்பு விடுதலை புலிகள்இயக் கப்போராளிகள் தங்கள் ஆயு தங்களைக்களைந்து ஒப்படை த்துவிடவேண்டும் என்று தமி ழர்குழுக்கள் உட்படபல அரசி யல் கட்சிகளும் முன்நிபந் தனை விதித்து உள்ளன.

ஈ. பி. டி. பி., ஈ என். டி. எல். எவ்., ஸ்ரீலங்கா சுதந்தி ரக் கட்சி ஆகியன இக்கட்சிக ளில் அடங்கும்;

விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படும் பேச்சுக்களும், இதை அடுத்துக் காணப்படும் தீர்வும் இலங்கையின் பிரதேச ஒருமைப்பாடு, ஆட்சியுரிமை, ஒற்றுமையுணர்வின் கட்ட மைப்புக்குள்தான் அமைய வேண்டும் என்று கொழும்பில் நேற்று இரவு கூடிய அக்கட்சி கள் தெரிவித்தன.

எந்த ஒரு குழுவும் ஆயுதங் கள் வைத்திருக்க அனுமதிக் கப்படக்கூடாது என்றும் இக் கட்சிகள் கோரியுள்ளன.

[உ-எ]

## காங்கேசனுக்கு கப்பல் வருவதில் தொழில்நுட்பத் தடங்கல்களாம்!

யாழ்ப்பாணம், ஜன 3

கொழும்பிலிருந்து உண வுப் பொருள்கள் கொண்டு வரும் கப்பல்களை, காங் கேசன்துறை துறைமுகத்துக்கு தருவிப்பது அனேகமாகச் சாத்தியமில்லை என்று நம் பிக்கையாகத் தெரிய வருகி றது.

கப்பல்களை காங்கேசனுக் குக் கொண்டுவருவதற்கான பாதுகாப்பு விடயங்களை ஒரு மாதிரிச் சரி செய்தாலும், தொழில்நுட்பப் பிரச்சினை களின்காரணமாக அது சாத்திய மாகாது என்று விஷயமறிந்த வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

கப்பல்களைக் காங்கேசனுக் குத் தருவிப்பது சம்பந்த மாக நேற்றுப் பலாலி இரா ணுவ முகாமில் உயர் மட்ட மாநாடு ஒன்று நடைபெற் றது.

யாழ்ப்பாணத்திலிருந்து நயினாதீவு சென்ற செஞ் சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் இருவரும், கடற்படை அதிகாரிகளும் அங்கிருந்து பலாலி சென்றி ருந்தனர்.

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ‘குமண’ வுடன் வவுச்சரும் வரும்!

யாழ்ப்பாணம், ஜன. 4

‘குமண’ கப்பல் வரும் பொழுது ஒய்வூதிய வவுச்சர் களும் வந்து சேரும் என எதிர் பார்க்கப்படுகிறது.

புனர்வாழ்வு அமைச்சில் தேங்கிக் கிடக்கும் இந்த வவுச்சர்களை யாழ் அரச அதிபர் கப்பலில் அனுப்பு வதற்கு ஏற்பாடு செய்துள் ளார். [ஒ-3]

## சவர்க்கார வரி குறைப்பு

கொழும்பு, ஜன. 4

சவர்க்கார உற்பத்திக்கு விதிக்கப்பட்ட நூறு சத வீத வரி 50 சத வீதமாகக் குறைக் கப்பட்டது.

அரசு நேற்று இதனை அறி வித்தது.

இதனால் சவர்க்கார விலை களில் பெருமளவு வீழ்ச்சி ஏற் படும் என்று வர்த்தக வட் டாரங்கள் தெரிவித்தன.

[ஓ-எ]

## எர்ஷாத் சிறைக்கு?

டாக்கா, ஜன 4

வீட்டுக்காவலில் வைக்கப் பட்டுள்ள பங்களாதேஷின் முன்னாள் ஜனாதிபதி எர் ஷாத்தை டாக்காவில் உள்ள மத்திய சிறையில் காவலில் வைப்பது குறித்து பங்களா தேஷ் அரசு பரிசிலனை செய்துவருவதாக அறிவிக்கப் படுகிறது. (ஒ-எ)

## சுக்லா கொழும்பு வருகிறார்

புதுடில்லி, ஜன 4

இந்திய வெளி விவகார அமைச்சர் திரு. வி. சி. சுக்லா எதிர்வரும் 29 ஆம் திகதி கொழும்புக்கு விஜயம் செய் வார் என்று நேற்று புதுடில் லியில் உத்தியோகபூர்மாக அறிவிக்கப்பட்டது.

[2 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



அறிக்கை விடுகிறதிலையும் ........ உத்திகள்........!

## யுத்த நிறுத்த மீறல்கள்:

## அரசு குற்றச்சாட்டு; புலிகள் மறுப்பு

கொழும்பு, ஜன. 4

விடுதலைப் புலிகள் தங்க ளின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்த அறிவிப்பை மூன்று தடவைகள் மீறியுள்ளதாக இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி இலங்கை வானொலி அறிவித்தது.

ஆனால் இந்தக் குற்றசாட்டு கள் தவறானவை என்று விடு தலைப் புலிகள் வட்டாரங் கள் மறுத்தன.

இலங்கை வானொலி தனது அறிவித்தலில் -

செவ்வாய்க்கிழமை செங்க லடி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்கி உள்ளனர்.

ஆனையிறவு இராணுவ முகாம் அருகே விடுதலைப் புலிகள் தங்கள் நிலைகளை நகர்த்தி உள்ளனர்.

எந்தத் திடீர்த் தாக்குதலை யும் சமாளிக்கக் கூடிய உஷார் நிலையில் வடக்கு - கிழக்கில்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## ‘குமண’ இங்கு வருவதில் காலதாமதம் ஏன்?

### அரச அதிபர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 4

இறங்குதுறைப் பிரச்சினை யாலேயே கப்பல் இங்கு வரு வதில் தாமதம் ஏற்பட்டுள் ளது.

யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இருந்து அரச அதிபர் நேற்று யாழ்ப்பாணத் திற்கு மேலதிக அரச அதிபரு டன் ‘வயர்லெஸ்’ மூலம் தொடர்புகொண்ட சமயம் மேற்படி தகவலைத் தெரிவித் தார்.

அரச அதிபர் அங்கிருந்து தெரிவித்ததாவது:

உணவு மற்றும் மருந்துகளு டன் ‘குமண’ கொழும்பில் தயார் நிலையில் உள்ளது. பொருள்களை இறக்குவதற்கு அங்கு (குடாநாட்டில்) சாத் தியமான நிலை ஏற்படுமிடத் து, அது உடனடியாகப் புறப்பட்டுவிடும்—என்றார்.

இதேவேளை—

யாழ் அரச அதிபர் திரு.

[3 ஆம் பக்கம் பார்க்க]

## பல்கலைக் கழக திருட்டு: விசாரணை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 4

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் சில பொருள்கள் களவாடப்பட்டமை, காணா மற்போனமை சம்பந்தமான விசாரணைகள் நேற்று ஆரம்ப மாகின.

திருட்டுகள், காணாமற் போதல் ஆகியவற்றைத் தடுப் பதற்கு உத்தியோகத்தர் களும், மாணவர்களும் ஒத் துழைப்பு நல்க வேண்டும் என்று உபவேந்தர் பேராசிரி யர் அ. துரைராஜா நேற்று விடுத்த வேண்டுகோள் ஒன் றில் கேட்டுள்ளார்:

பல்கலைக்கழகத்தின் சொத்தினைப் பாதுகாப்ப தில் நாம் அனைவரும் ஒரே நோக்குடன் செயற்படவேண் டும். இது பொதுச்சொத்து மட்டுமல்ல. தமிழ் மக்களின் உயர் கல்விக்கு ஆதாரமான முதலீடு. இச்சொத்தினால் பயன் பெறும் மாணவரும்,

[2 ஆம் பக்கம் பார்க்க]

## கரம்பன் ஆஸ்பத்திரி வீதியில்

## வீடு பார்க்கச் சென்ற முதியவர் எங்கே?

புளியங்கூடல், ஜன. 4

ஊர்காவற்றுறையில், கரம் பன், ஆஸ்பத்திரி வீதியிலுள்ள தமது வீட்டைப் பார்வை யிடச் சென்ற முதியவர் ஒரு வர் திரும்பி வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீக்கிலாப்பிள்ளை போசேப் (வயது 62) என்பவரே இன் னும் இருப்பிடம் திரும்ப வில்லை. இவர் நேற்று முன் தினம் காலை அங்கு [கரம் பன்] சென்றார். நேற்று மாலை வரை திரும்பவில்லை என்று உறவினர்கள் உதய னுக்குத் தெரிவித்தனர்.

ஊர்காவற்றுறையில் நிலை கொண்டிருந்த இராணுவத் தினர் அங்கிருந்து வெளி யேறிச் சென்று விட்டதாக நிலவிய வதந்தியை உண்மை யென நினைத்த பொதுமக் கள் அங்கு அவசர, அவசர மாக விரைந்தனர் என்றும்_

அங்கு இராணுவத்தினர் தங்கி இருப்பதை அவ தானித்த அவர்கள் ஒருவாறு

[2 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்புக் காய்ச்சல் தீவிரமாக பரவுகிறது
## நீரை சுடவைத்து பருகுங்கள்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது நெருப்புக் காய்ச்சல், வயிற்றோட்டம் ஆகிய நோய்கள் வேகமாகப் பரவி வருகின்றன.

யாழ். போதனா ஆஸ்பத்திரியின் நோயாளர் அனுமதிப் புள்ளி விவரங்களில் இருந்து இந்த விவரம் தெரியவந்துள்ளது.

ஆஸ்பத்திரியில் காய்ச்சல் என்று அனுமதிக்கப்பட்டவர்களில் சுமார் 75 சதவிதத்தினர் நெருப்புக் காய்ச்சல் அறிகுறிகள் உள்ளவர்கள் என்று அறியவந்துள்ளது. வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களும் நாளாந்தம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட வண்ணம் உள்ளனர்.

கொழும்புத்துறைப் பகுதியிலேயே நெருப்புக் காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகிறது.

தண்ணீராலேயே இரண்டு நோய்களும் உண்டாவதாகவும் மக்கள் தண்ணீரைக் கொதிக்க வைத்துப் பருக வேண்டும் என்றும் வைத்தியர்கள் ஆலோசனை தெரிவித்தனர்.

கிணறுகளில் நீர் அதிகமாக உள்ள காலத்திலேயே இந்நோய்கள் பரவ ஆரம்பித்து விட்டன. நீர் வற்றி அடியில் உள்ள அசுத்தம் வேகமாக நீரில் கலக்கும் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் நெருப்புக் காய்ச்சலும், வயிற்றோட்டமும் மேலும் அதிகரிக்கலாம் என்று வைத்திய வட்டாரங்கள் அச்சம் தெரிவித்தன. [அ-15]

### ஆஸ்பத்திரி மூடப்பட்டதால்
# வைத்தியவசதி இல்லாது காசநோயாளி மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 4

அதிக இரத்த வாந்தியுடன் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் அவசர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டும் மரணமாகி விட்டார்!

இறந்தவர் ஒரு காசநோயாளி என்றும், கடந்த ஆறு மாதங்களுக்கு மேல் தகுந்த சிகிச்சை இல்லாததாலேயே அவருக்கு நோய் முற்றி இந்தப் பரிதாப நிலை ஏற்பட்டது என்றும் வைத்திய வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன.

தெல்லிப்பளையில் உள்ள அகதி முகாம் ஒன்றில் இவர் மூன்று நாட்களாக இரத்த வாந்தி எடுத்தார் என்றும் -

அதனைத் தடுப்பதற்கான சிகிச்சை வசதி எதுவும் அங்கு இருக்கவில்லை என்றும் - அறிய வந்தது.

வடபகுதியில் உள்ள ஒரேயொரு காசநோய் ஆஸ்பத்திரி மயிலிட்டியில் இயங்கியது. இராணுவ நடவடிக்கைகள் காரணமாக அது சேதம் அடைந்து மூடப்பட்டுக் கிடக்கிறது. அதன் காரணமாகக் காசநோயாளர்களுக்கு வைத்திய வசதி முற்றாகத் தடைப்பட்டிருக்கிறது.

இந்நிலை தொடர்ந்தால், நோயாளருக்கு காசம் முற்றி அவர்களுக்கு உயிராபத்து ஏற்படும அபாயம் உண்டு என்றும், யாழ். ஆஸ்பத்திரியில் இரத்த வாந்தியால் இறந்த 44 வயது நபரின் மரணம் அதற்கு ஓர் எடுத்துக்காட்டு என்றும் வைத்திய வட்டாரங்கள் எச்சரித்தன. (அ-15)


★ கீன் சென்றர் ★

திருநெல்வேலி.

ஆண்டு 6, 7, 8 வகுப்புகள்

ஆரம்பம்: 05 - 01 - 1991

மாலை 2, 30 பி. ப.

யாழ். நகர் முன்னணி ஆசிரியர்கள் ஒருங்கிணைகின்றனர்.

ஆண்டு 9, 10, 11 வகுப்புகள்

விஞ்ஞானம் - இரா செல்வவடிவேல்
கணிதம் - S. வாமதேவன்
தமிழ் - ஞானதிருக்கேதீஸ்வரன்
சமூகக்கல்வி - A. குணசிங்கம் B A.
ஆங்கிலம் - M. A. ஹரிB.A.(Dip-in-eng)
வர்த்தகம் - M. சிவகுமார்

ஆரம்பம்:- 05 - 01 - 1991

மாலை 3 30 பி, ப.

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன;


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

கா. மனோறஞ்சிததேவி (லக்கி)

வீரஜனனம் 10-02-1971

வீரமரணம் 21-11-1990

தமிழினத்தின் விடிவுக்காக
தமிழீழத்தின் மலர்விற்காக
தன்னையே அர்ப்பணித்து - பலாலிதனிலே
வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட
வீரவேங்கை லக்கிக்கு - எமது
இதயபூர்வ அஞ்சலிகள்

உன் ஆத்மா சாந்தியை நாடும்
அப்பா, அம்மா, சகோதரன், சகோதரி
மற்றும் உற்றார், உறவினர்கள்.

க. கார்த்திகேசு
மேற்கு சுழிபுரம்
சுழிபுரம் (15204)

# ஊழியர்கள் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜன. 4

வடபிராந்திய போக்குவரத்து சபையின் தலைமை அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான விமானத் தாக்குதலால் சபை ஊழியர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.

-கடந்த 30 திகதி இடம்பெற்ற விமானத் தாக்குதலை கண்டித்து தமிழ் பேசும் போக்குவரத்து ஊழியர் சங்கம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-3]

# மகாபொல கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜன 4

யாழ் பல்கலைக்கழக முதலாம் வருட மாணவர்களுக்கான மகாபொல புலமைப் பரிசில் கொடுப்பனவு நேற்று முதல் வழங்கப்பட்டு வருகிறது.

முதலாம் வருடத்தைச் சேர்ந்த சுமார் 500 மாணவர்களுக்கு நவம்பர், டிசம்பர் மாதங்களுக்குரிய மகாபொல கொடுப்பனவுகள் ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படுகிறது.

யாழ் பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. கே. பரமேஸ்வரன் இத்தகவலை தெரிவித்தார். (ஓ-6)

# சோதனை

சாவகச்சேரி நகரிலுள்ள சில கடைகளில் விடுதலைப் புலிகள் திடீர் பரிசோதனைகளை அண்மையில் நடத்தினர்.

வர்த்தகர்கள் பொருள்களை பதுக்கி வைத்திருப்பதாக பொதுமக்கள் கொடுத்த புகார்களை அடுத்தே இந்தத் திடீர் வேட்டை நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)

# கசிப்பு உற்பத்தியில் பெண்களும்!

கோண்டாவில் வடக்குப் பகுதியில் இரகசியமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த 8 பேர் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்களில் மூவர் பெண்கள்;

மிகவும் நுணுக்கமான உபகரணங்களைக் கொண்டு - வெளியாருக்கு தெரியாத விதத்தில் இவர்கள் கசிப்பு தயாரிப்பில ஈடுபட்டு வந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் புதுவகையான உபகரணங்கள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டன. [ஓ]

# கூட்டம்

யாழ் மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாச இயக்குனர் சபைக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 30 மணிக்கு நீர்வேலி பல.நோ.கூ. சங்க மண்டபத்தில் நடைபெற இருக்கின்றது.

★

யாழ்ப்பாணம், ஜன 4

முறைசாராக் கல்விப் பிரிவுகளில் கடமையாற்றும் போதனாசிரியர்களுக்கான விசேஷ பொதுக்கூட்டம் எதிர்வரும் 6-ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

போதனாசிரியர்கள் அனைவரும் வகுப்பு முன்னேற்ற அறிக்கைகளுடன் சமூகமளிக்க வேண்டும் என முறைசாராக் கல்விப்பிரிவு கல்வி அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் முறைசாராக் கல்விப் பிரிவுகளில் பயின்று வேலைவாய்ப்புக்காக முறைசாராக் கல்விப்பிரிவுக்கு விண்ணப்பித்தோரும் அன்றைய தினம் காலை 11 மணிக்கு முறைசாராக் கல்விப்பிரிவில் கூடுமாறு கோரப்பட்டுள்ளது.

# சதாம் 'ஆண்டின் நாயகன்'!

லேகோஸ், ஜன. 4

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் 'ஆண்டின் நாயகன்' (Man of the year) ஆக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நைஜீரியாவின் பிரபல சஞ்சிகை 'நியூஸ் வாட்ச்' இந்தத் தெரிவைச் செய்துள்ளது. (ஓ-எ)

# விவேகானந்தர் தினம்

யாழ்ப்பாணம், ஜன 4

சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினம் எதிர்வரும் ஏழாம் திகதி, பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச்சிரமத்தில நடைபெற உள்ளது.

காலையிலும், நண்பகலிலும், மாலையிலும் விசேட பூசைகள், பஜனைகள் என்பன நடைபெறும். மாலை நேர நிகழ்ச்சியின் போது. சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கைச் சரித்திரம் எடுத்துரைக்கப்படும். [அ]

# பனி மழையால் 300 பேர் பலி

காபூல், ஜன. 3

கடும் பனிமழை காரணமாக ஆப்கனிஸ்தானில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 300 ஆக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடும்பனி ஆப்கன் மலைப் பிரதேசங்களைப் பாதித்துள்ளது. (இ-எ)

### பல்கலைக்கழக ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

உத்தியோகத்தர்களுமே இதனைப் பாதுகாக்க வேண்டும்-

பொருள்கள் களவு போவதையோ தளபாடங்கள் சேதமாவதையோ தடுப்பதற்கு மாணவர்களும் உத்தியோகத்தர்களும் உதவ வேண்டும். உங்கள் மத்தியில் இருந்து யாராவது ஒரு சிலர் இக் குற்றத்தைப் புரியலாம். அவர்களைத் தடுக்க முயலுங்கள் அல்லது அவர்களை இனம் கண்டு கொள்ள நிர்வாகத்திற்கு உதவுங்கள்- என்று உபவேந்தர் தமது வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார்

இதேவேளை பல்கலைக்கழக நிர்வாகம் திருட்டுகள் நடைபெறுவதை தடுக்க சில ஒழுங்குகளைச் செய்துள்ளது. [அ-6]

### வீடு பார்க்க....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தப்பி வந்து விட்டனர் என்றும் அறியவருகிறது

ஆனால் நீக்கிலாட்பிள்ளை யோசேப்பின நிலை என்ன என்று தெரியவில்லை. அவர் இராணுவத்தினரிடம் சிக்கிக் கொண்டாரா அல்லது வேறு அசம்பாவிதங்கள் ஏதும் நடந்ததா என்பது குறித்து அறிய முடியவில்லை

இவருக்கு என்ன நடந்தது என்பது பற்றி அறிய பங்குத் தந்தையின் உதவி நாடப்பட்டுள்ளது. [ஓ-125]

### ஆசு குற்றச்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் வைக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்திலும் அதிரடிப் பொலிஸ் படையினர் தயார் நிலையில் உள்ளனர் - என்று தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தகவல் வெளியீடுகையில்-

நேற்று முன்தினம் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து வெளியேறி முள்ளிக்குளம் சந்திக்கு இராணுவத்தினர் வந்த போது மிதிவெடி ஒன்று வெடித்ததாகவும்-

சேதவிபரம் தெரியவில்லை என்றும் -

இதனையடுத்து இராணுவத்தினர் திரும்பி முகாமுக்குச் சென்றனர். என்றும் தெரிவித்தன. [உ-எ]

# கண்டி வீதி ஊடாக வவுனியா செல்லலாம்

யாழ்ப்பாணம், ஜன. 4

கண்டி வீதியூடாக வவுனியா நகருக்குள் செல்ல நேற்று பயணிகள் அனுமதிக்கப்பட்டனர். எனினும் வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இதேவேளை கொழும்பிலிருந்து வடக்கு நோக்கிவந்தவர்கள் பூந்தோட்டப்பாதையூடாகவே பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர் என்று அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர். [ஓ-5]

# இந்திய லோக சபையில் நேற்று ஒரே அமளி!

இந்திய லோகசபை நேற்றும் பலதடவை அமளிதுமளிப்பட்டது.

சபாநாயகர் ரபிரேயை அமைச்சர் சுப்பிரமணிய சுவாமி மிரட்டியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக எதிர்க்கட்சியினர் நேற்றும் அமளியை ஏற்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்தே சபை மூன்று முறை ஒத்தி வைக்கப்பட்டது.

இறுதியில் சபையின் கூட்டம் நேற்று நடைபெறாத நிலை ஏற்பட்டது.

''அமைச்சரவையில் இருந்து சுப்பிரமணிய சுவாமியை நீக்க வேண்டும். அவரைக் கைது செய்ய வேண்டும்'' - என்றும் சில எதிர்க் கட்சி எம் பிக்கள் சபையில் கோரிக்கை எழுப்பினர். [ஓ-எ]

# சோமாலிய அரசு யுத்தநிறுத்தம் கேட்கிறது

சோமாலியாவில் யுத்தநிறுத்தம் ஒன்றுக்கு இணங்கும்படி ஜனாதிபதி பாரி நேற்று ஐக்கிய சோமாலி காங்கிரஸ் போராளிகளைக் கேட்டிருக்கிறார்.

யுத்தநிறுத்தம் ஒன்று ஏற்பட்டவுடன் நாட்டின் சகல பிரச்சினைகளுக்கும் பேச்சுக்கள் மூலம் தீர்வுகாணலாம் என்றும் அவர் விருப்பம் தெரிவித்திருக்கிறார்.

இதனைப் போராளிகள் ஏற்கவில்லை.

முதலில் ஜனாதிபதி நாட்டைவிட்டு வெளியேற வேண்டும்; அதன் பின்னரே யுத்தநிறுத்தம் பேச்சுவார்த்தை — என்று போராளிகள் அறிவித்துள்ளனர். (ஓ-எ)

# ஈராக்குடன் பேச ஜனாதிபதி புஷ் தயாராம்

வாஷிங்டன், ஜன. 4

ஈராக்குடன் நேரடிப பேச்சுக்களை அடுத்தவாரம் சுவிற்சர்லாந்தில் நடத்தத் தயார் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நேற்று அறிவித்தார்.

இம் மாதம் 7 ஆம் திகதிக்கும் 9 ஆம் திகதிக்கும் இடையில் சுவிற்சர்லாந்தில் ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரீக் அஸிஸை சந்தித்துப் பேச வெளியுறவு அமைச்சர் பேக்கரை அனுப்ப தாம் தயாராக இருப்பதாகவும் திரு. புஷ் தெரிவித்தார்.

அமெரிக்க நாடாளுமன்றத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்தே அதிபர் புஷ் முன்சண்டவாறு தெரிவித்தார்.

புஷ்ஷின் அறிவிப்பை பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் வரவேற்றுள்ளார். [ஓ-எ]

# மரண அறிவித்தல்கள்

## சங். சகோ. சென் லோறன்ஸ்

சரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான சங். சகோ. சென் லோறன்ஸ் அவர்கள், தமது 71-வது வயதில், 3-1-1991 அன்று இளவாலையில் இறைபதம் சேர்ந்தார்கள்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள், இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடத்தில், 4-1-1991 வெள்ளிக்கிழமை பி. ப. 3 மணிக்கு இடம்பெறும்.

''உயிர் வாழ்கையில் என்னில்
விசுவாசம் வைப்பவன் இறப்பினும் வாழ்வான்''

திருக்கு. மாகாண இல்லம், யாழ்ப்பாணம். [15203]

தகவல்: மாகாணத் தலைவி

## திரு.சுப்பிரமணியம் நடராசா

நல்லூர் சங்கிலியன் வீதியைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் நடராசா [தம்பி நடராசா] அவர்கள் 3 1-1991 அன்று காலமாகிவிட்டார்;

இவர் திலகவதியின் அன்புக் கணவரும், சற்குணகுமாரி, சாந்தகுமாரி, ஜெயகுமாரி [நாஷனல் சேவிங் பாங், யாழ்.], சிவபாலன் [ஜேர்மனி], ஜெயபாலன் [ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தந்தையும். திரு. இ. முத்துலிங்கம் [டுபாய்], திரு. இ. சிவநேசன், திரு. ப. லக்ஷ்மன் [செல்ல மகால் தியேட்டர் மனேஜர், சொட்டாஞ்சேனை], திருமதி சி. நாகேஸ்வரி ஆகியோரின் மாமனாரும், திருமதி க. செல்லம்மா, திரு. சு. இராமநாதன் [ஓய்வுபெற்ற C. T. B சாரதி] ஆகியோரின் அன்புச் சகோதரரும், கீர்த்திகா, கௌசிகா, சாயிரப்யா, சஞ்சீவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் வெள்ளிக்கிழமை [இன்று] பிற்பகல் 3-00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்: உற்றார், உறவினர் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

36, சங்கிலியன் வீதி, நல்லூர்.

திரு. சு, இராமநாதன் [15205]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதயன்

### வானொலியின் வம்புத்தனம்

தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தை அறிவித்தது குறித்து, வெளி உலகத்தில் பல தரப்பினரும் வரவேற்பும், திருப்தியும் தெரிவித்திருக்கின்றனர்.

இவர்களில் இந்தியப் பிரதமர் சந்திரசேகரும், தமிழக முதல்வர் கருணாநிதியும் அடங்குவர். விடுதலைப் புலிகளைப் பரம விரோதியாகக் கருதும் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி ஒருபடி மேலே சென்று, யுத்த நிறுத்தத்தை இலங்கை அரசு ஏற்காமல் இருப்பது குறித்துக் கவலையும் தெரிவித்தார்.

ஈழத்திலிருந்து செல்லும் அகதிகள் விவகாரத்தைத் தமது அரசியல் மேலாதிக்க நலனுக்குத் தேவையான விதத்தில், தக்கபடி பயன்படுத்தியவர் முன்னாள் பிரதமர் ராஜீவ்.

ஆனால் இப்போது அப்படி ஒரு தேவை இல்லாததால், 1987 இன் அணுகுமுறை பிழைத்து விட்டதால், அகதிகளை ஒரு தொல்லையாகக் கருதுகிறது இந்தியா.

அதனால் ஈழத்தமிழ் அகதிகளை விரைவில் தமிழகத்திலிருந்து கப்பலேற்றி விட வேண்டும் என்ற எண்ணம் மத்திய அரசிடம் மேலோங்கி நிற்பதை அவதானிக்க முடிகிறது.

எனினும் அதே வேளையில் இலங்கைப் பிரச்சினையை தன்னைத் தவிர வேறு எந்த நாடும் தலையிட்டுச் சமரசம் செய்து வைக்கக் கூடாது என்ற வைக்கோல் பட்டறை நாயின் நிலைப்பாட்டையும் இந்திய அரசு கடைப்பிடித்து வருகிறது.

இத்தகைய இரண்டு முகத் தோற்றத்துடன் இலங்கைப் பிரச்சினையை அணுகி வரும் இந்திய அரசும், அதன் தலைவர்களும் உலகத்திடம் நல்ல பெயர் வாங்குவதற்காக விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்தத்தை வரவேற்று கருத்துத் தெரிவித்தனர்.

ஆனால் அரசின் அரைக் கட்டுப்பாட்டில் உள்ள இந்திய வானொலியும், தொலைக்காட்சியும் போர் நிறுத்த முயற்சியைக் குழப்ப வேண்டும் என்ற வம்புத் தனத்துடன் கருமமாற்றி வருகின்றன.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சே கணக்கெடுக்காமல், மிக மிகச் சிறியவை என்று வர்ணித்த இரு சம்பவங்களைப் பிரசித்தப்படுத்தி, விடுதலைப் புலிகள் தாங்கள் அறிவித்த யுத்த நிறுத்தத்தையே மீறிவிட்டதாக அழுத்தம் கொடுத்து இந்தியத் தொடர்பு ஸ்தாபனங்கள் குழி பறிக்கின்றன.

அரசுக்குச் சார்பான இந்தியப் பத்திரிகைகள் சிலவும், பிரேமதாஸாவின் நாடியை நன்றாக அறிந்த நண்பர்களைப்போல எழுதியுள்ளன. புலிகளின் நிபந்தனைகளை அவர் ஏற்றுக்கொள்ளமாட்டார் என்று அவர் சார்பில் அபசகுனமான ஊகங்களை வெளியிட்டுக் குழப்பியுள்ளன.

உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசி வருவது மட்டுமல்லாமல், இலங்கையில் — தமிழ்ப் பகுதிகளில் — எப்போதும் பிரச்சினைகளும், குழப்பங்களும் கொதித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று இந்தியா விரும்புகிறதா?

# நியமனம் பெற்ற அதிபர்களுக்கு பாடசாலைகள் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜன. 4

இலங்கை பாடசாலை அதிபர் சேவையின் முதலாம் தரத்திற்கு நியமனம் பெற்றவர்களுக்கு அதிபர்கள், பிரதி அதிபர்கள் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் 27 பேர் அதிபர்களாகவும், 3 பேர் பிரதி அதிபர்களாகவும் 1991 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நியமனம் பெறுகின்றனர்.

புதிதாக நியமனம் பெற்றுள்ள அதிபர்கள், பிரதி அதிபர்கள், அவர்கள் பணிபுரிய ஒதுக்கப்பட்டுள்ள பாடசாலைகள் ஆகிய விவரங்கள் வருமாறு:-

#### அதிபர்கள்

எஸ். தார்சியஸ் - யாழ். சென். மேரிஸ், எம். திருஞானசம்பந்தபிள்ளை- யாழ். இந்து ஆரம்ப பாடசாலை, திருமதி பி எவ். சின்னத்துரை - யாழ். புனித யோசேப்பு ம. வித்., திருமதி எஸ். காங்கேயன் - யாழ். நல்லூர் இந்து த.க. பா., சண்முகநாதன் - யாழ். கொட்டடி நமசிவாய வித்., திருமதி ஜெயராசா - யாழ். கொக்குவில் ஞானபண்டித வித்., கே. கலாகரன் - மண்டைதீவு ம. வித்., க. இராசதுரை - காங்கேசன்துறை நடேஸ்வரா, எஸ். சண்முகலிங்கம் - சுழிபுரம் ஆறுமுக வித்., கே. சந்திரபாலன் - சங்கானை சிவப்பிரகாச வித்., எஸ். செல்வராசா - அராலி இந்துக் கல்லூரி, ச. கனகராசா - கோப்பாய் சரவணபவானந்த வித்., இ. சிவஞானசுந்தரம் - ஊரெழு கணேச வித்.,

செ. சிவலிங்கராசா - அச்செழு, சைவப்பிரகாச வித்., கே. கதிரவேலு - கோப்பாய், ம. வித்., சி. பாலசுப்பிரமணியம் - யாழ். உரும்பராய் இந்து. சி. செல்லையா- அச்சுவேலி ம. வித்.

ஆ. கமலநாதன்- இணுவில் சைவப்பிரகாச வித்., ஆர். இருதயநாதன் - மானிப்பாய் சென். ஆன்ஸ். றோ.க.த.க.பா., கே. முத்துக்குமாரசாமி - கோப்பாய் கிறிஸ்தவக் கல்.

என். சத்தியநாதன் - நாவற்குழி ம.வித்., எம். சாம்பசிவம் - மட்டுவில் கமலாசினி, வித்., ஜே. யோன்பிள்ளை -மிருசுவில்றோ. க. த. க. பா., திருமதி என். தாமோதரம்பிள்ளை - சாவகச்சேரி மகளிர், கல்.

ஈ. கணேசன் - மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வித்., எஸ். தனபாலசிங்கம்- யாழ். கட்டுவன்புலம், ம. வித்., வை. சச்சிதானந்தம், - யாழ். வதிரி தேவரையாளி இந்து. கல்.

#### பிரதி அதிபர்கள்

எஸ். ஜெயநாயகம் - பண்டத்தரிப்பு இந்து கல்., திருமதி ஏ. சிவஞானசுந்தரம்- தெல்லிப்பளை மகாஜனாடி ஆர். கலைநாதன் - கொ. காமம்தி ருநாவுக்கரசு வித் (ஓ-5)

## காங்கேசனுக்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ருந்தும் செ. ச. சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள்இருவரும், புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகளும் அங்கு வந்திருந்தனர்.

இவர்கள் இருசாராரும் மற்றும் பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த உயர் அதிகாரிகளும், கப்பல்களை காங்கேசனுக்குத் தருவிப்பது குறித்து நீண்ட நேரம் பலாலியில் ஆராய்ந்தனர்.

கப்பல்களை காங்கேசனுக்குக் கொண்டு வருவதில் உள்ள தொழில் நுட்பத் தடங்கல்கள் குறித்து மாநாட்டில் எடுத்துரைக்கப்பட்டதாக அறிய வந்தது. [அ-5

## குமண...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

அன்ரன் அல்பிரட்டுக்கு இடமாற்ற உத்தரவு எதுவும்வழங்கப்படவில்லை.

திரு. அன்ரன் அல்பிரட்டே நேற்று கொழும்பில் இருந்து இதனைத் தெரிவித்தார்

இடமாற்றமோ, வேறு புதிய பதவியோ தமக்கு வழங்கப்படவில்லை என்றும் விரைவில் தாம் யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (ஓ-3)

## சுக்லா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

3 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு, கொழும்பு வரும் அமைச்சர் சுக்லா ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா மற்றும் அமைச்சர்கள், கட்சித் தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்து முக்கிய பேச்சுக்களை நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அரச தரப்பு ஏழு நாட்களுக்கு.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதை அரசு திட்டவட்டமாக நிராகரிக்கிறது.

அரசு தனது இறைமையை நாட்டின் சகல பகுதிகளிலும் நிலைநாட்டும்.

நாட்டின் உள்ளேயிருந்தும் வெளியே இருந்தும் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு எதிராக வரும் ஆக்கிரமிப்புகளை அரசு தொடர்ந்து எதிர்க்கும்.

### தமிழ் மக்கள்மீது யுத்தம் இல்லை

இலங்கை அரசு பெரும் தமிழ் இனப் படுகொலையில் ஈடுபடுவதாக விடுதலைப் புலிகள் தங்கள் அறிக்கையில் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

அரசு முன்னரும் தமிழ் மக்கள்மீது யுத்தம் நடத்தியது இல்லை; இப்போதும் யுத்தம் நடத்தவில்லை. இனியும் நடத்தப்போவதும் இல்லை.

இடைக்கால நடவடிக்கையாகவும்—

அமைதியான அரசியல் தீர்வு காணவேண்டும் என்ற அரசின் உறுதிப்பாட்டை எடுத்துக் காட்டும் அடையாளமாகவும்—

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை வடக்கு—கிழக்கு மாகாணத்தில் வியாழக்கிழமை நள்ளிரவு முதல் அடுத்த ஏழுநாட்களுக்கு இடைநிறுத்தி வைப்பது என்று அரசு தீர்மானித்துள்ளது.

### ரோந்து தொடரும்

பாதுகாப்பு படையினர் ரோந்து நடவடிக்கைகளையும் இராணுவ நடமாட்டங்களையும் இக்காலத்தில் தொடருவர்.

சட்டம் - ஒழுங்கு பராமரிப்பு, சிவில நிர்வாகம், பாதுகாப்பு, பிரதேச ஒருமைப்பாட்டை பேணுதல் ஆகியவற்றுக்கு இது அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது.

இராணுவ நடவடிக்கை நிறுத்தம பயனளிக்கக் கூடியதாக இருப்பதற்கு இலங்கை ஆயுதபபடை, பொலீஸ் மற்றும் துணைப்படைகள் மட்டுமே சீருடையில் ஆயுதங்களை எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்படுவர்.

பாதுகாப்புப் படையினர் தங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் உரிமையை தாங்களே தொடர்ந்து வைத்துக் கொள்வர்.

முன்னர் போன்று, இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு எதிராகவும்–

கிரனேட்டுகள், வெடி மருந்துகள் மற்றும் ஆயுதங்களை எடுத்துச் செல்வோர் மீதும்–

இன ஒற்றுமையை குலைக்கும் எந்தக் குழுவின் மீதும்–

மக்கள் மத்தியில் ஊடுருவ முயலும் போராளிகள் மீதும்-

பணம் பறிப்போர் மீதும்–

ஜனநாயக அரசியலில் ஈடுபடும் எவரின் நடவடிக்கைகளும் சுதந்திரமான நடமாட்டமும் கட்டுப்படுத்தப்படாமல் இருக்கவும்- பாதுகாப்புப் படையினர் நடவடிக்கை எடுப்பர்.

ஏழு நாட்கள் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தும் இந்த இடைக்கால ஏற்பாடு அமைதியைப் பேணும் நடவடிக்கைகளை மேற்கொள்ள மேலும் உதவும் என்று நம்பப்படுகின்றது.

நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காணுவதற்கு இது அடிப்படைத் தேவையாகும்.

### விடுவிக்க வேண்டும்

நல்லெண்ண நடவடிக்கைகள் முதற் கட்டமாக விடுதலைப் புலிகள் தமது பாதுகாப்பில் வைத்திருக்கும் பாதுகாப்பு படையினர், பொலீஸார் மற்றும் பொதுமக்களை விடுதலை செய்யும் என்று அரசு நம்புகின்றது.

யுத்த நிறுத்தத்திற்கான நிபந்தனைகளை (Conditions Governing the Ceasefire) அனுசரிப்பதை பொறுத்தே ஏழு நாள் இராணுவ நடவடிக்கை நிறுத்தத்தை மேலும் நீடிப்பது பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

இது அரசியல் தீர்வு ஒன்று காண வழி வகுக்கும். இது சம்பந்தமான பேச்சுக்களில் சகல அரசியல் கட்சிகளும் இடம்பெறும்.

### பேச்சுக்கு நிபந்தனை

இப்பேச்சுக்களுக்கு முன்னோடியாக, அதிகாரமளிக்கப்பட்டவர்களைத் தவிர ஏனைய குழுக்களோ, ஆட்களோ ஆயுதங்களை வைத்திருப்பதற்கு எதிரான பிரகடனத்தை வெளியிட வேண்டும்.

இது பேச்சுக்களை நடத்துவதற்கான உகந்த சூழ்நிலையை உருவாக்கும்.

— இப்படி அரசு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைச்சிகிச்சை செய்ய இலங்கைத் தமிழ் அகதிகள் மீது நிர்ப்பந்தம்

தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழ் அகதிகள், குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என்று கூறப்படுகிறது.

இதற்கு ஆதாரமாக தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் ஜூனியர் விகடன் 29-8-90 இதழில் வெளியான கட்டுரை ஒன்றை இங்கு பிரசுரிக்கிறோம். ஜூனியர் விகடன் செய்தியாளர் அகதிமுகாம்களுக்கு நேரில் சென்று பல அகதிகளைச் சந்தித்து எழுதிய கட்டுரை இது.

தமிழகத்தின் பல பகுதிகளிலும் உள்ள இலங்கை அகதிகளுக்குப் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை அரசு அளிக்கும் உதவித் தொகை பிரித்துக் கொடுக்கப்படுகிறது.

அடிப்படை வசதிகளை அரசு செய்துகொடுத்தாலும் இதர செலவினங்களையும் அவர்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

வீடு, வாசல், சொத்து ஆகியவற்றை இழந்து நிற்கும் இந்த அகதிகள் சிலரிடம் மட்டும் இலங்கைப் பணம் கொஞ்சம் உள்ளது. ஆனால், அதையும் இவர்களால் உடனே மாற்ற முடியவில்லை

சில அகதிகள் தங்களிடமுள்ள வெளிநாட்டுப் பொருள்களை முகாம் அமைந்துள்ள இடங்களில் உள்ள வெளியார்களிடம் குறைந்த விலைக்கு விற்றுத் தங்களது செலவுகளை ஓரளவுக்குச் சமாளிக்கிறார்கள்.

நெல்லை மாவட்டம் வள்ளியூரில் அமைந்திருக்கும் அகதிகள் முகாமில் உள்ள சில அகதிகள் தங்கள் பெட்டிகளில் உள்ள பித்தளைப் பூட்டுக்களை விலைக்கு விற்கிறார்கள்.

### கஷ்ட நிலையை பயன்படுத்தும் அதிகாரிகள்

இதைப் பார்த்த ஆரம்ப சுகாதார நிலைய ஊழியர்கள் சிலர், அகதிகளின் வறுமையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு, அவர்களுடன் 'நைஸா'கப் பேசி குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ளும்படி சொல்கிறார்கள்; குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டால் 300 ரூபா கிடைக்கும் என்பதால் அகதிகளும் சம்மதிக்கிறார்கள். உடனே இதற்கான ஏற்பாடுகளைச் செய்து, மாதத்துக்கு இவ்வளவு ஆட்களைக் குடும்பக் கட்டுப்பாடு செய்யக் கொண்டுவர வேண்டும் என்ற தங்களது இலக்கை இவர்கள் மூலம் ஆரம்ப சுகாதார ஊழியர்கள் சாதித்து வருகின்றனர்.

பொதுவாக இலங்கையில் தமிழர்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வதை தமிழ்ப் பகுதிகளில் எவரும் ஊக்குவிப்பதில்லை. தமிழ்த் தாய்மார்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்தால் தமிழ் இனம் பெருகாது என்பதே இதன் காரணம்.

நெல்லை மாவட்டம் ராதாபுரம் தாலுகாவில் உள்ள சமூகரெங்கபுரம் அகதிகள் முகாமில் குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட சில பெண்களை நான் சந்தித்தேன்.

மலர் (திருகோணமலை) கூறியதாவது:

'இந்த மாதம் பத்தாம் திகதி காலை ஒன்பது மணிக்கு ஜீப்பில் ஏற்றி ஒரு அஸ்பத்திரிக்குக் கூட்டிப் போனார்கள். எங்களைப் போல அந்த டாக்டரிடம் நிறையப் பேர் வந்திருந்தார்கள். முந்நூறு ரூபாவும், ஒரு 'விவா' போத்தலும், பகல் சாப்பாடும் கொடுத்தார்கள். எங்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து 5 மணிக்குத் திரும்பவும் இங்கேயே கொண்டு வந்து விட்டார்கள்.

மகேஸ்வரி (மன்னார்) கூறியதாவது:

'இங்கே இருக்கிற தாதிமார் என்னைக் குடும்பக்கட்டுப்பாடு செய்யச் சொன்னார்கள். நான் சென்ற மாதம் இலங்கையில் குடும்பக் கட்டுப்பாடு செய்ய நினைத்த போது, அப்போது என்னுடைய உடம்பைப் பரிசோதித்து அறுவைச் சிகிச்சை செய்ய இரத்தம் போதாது என்று சொல்லி, திருப்பி அனுப்பிவிட்டார்கள். இப்போது எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். அவர்கள் பிறக்கும் போதே இரத்தம் செலுத்தித்தான் பிறந்தார்கள். அடிக்கடி உடம்பு வருத்தம் வருகிறது. அறுவைச் சிகிச்சை செய்து தந்த முந்நூறு ரூபாவை வைத்து குழந்தைகளுக்கு பால்மா மற்றும் அன்றாடத் தேவைகளுக்காக நான் இப்போது செலவழித்து வருகிறேன்.

பரமேஸ்வரி [வவுனியா] சொன்னதாவது:

எனக்கு இரண்டு குழந்தைகள். இலங்கையில் சிங்களவர் மட்டும்தான் குடும்பக் கட்டுப்பாடு செய்வார்கள். இங்குள்ள தாதிமார்கள் கேட்டவுடன் நான் சரி என்று சொல்லிவிட்டேன். அவர்கள் தந்த பணத்தில் மருந்து இங்கிலீஷ் காய்கறிகள் வாங்கி இப்போது செலவழித்து வருகிறேன்.

இப்படி அவர் கூறினார்.

### வறுமையே காரணம்

நான் முகாமில் பலரிடமும் பேசியபோது, அவர்களின் வறுமையே குடும்பக் கட்டுப்பாட்டுக்குக் காரணம் என்று தெரிய வருகிறது. இதனை ஆரம்ப சுகாதார நிலைய ஊழியர்கள் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர்.

உட்காரக்கூடப் போதுமான இடவசதி இல்லாத சூழ்நிலையில் அவசர அவசரமாக அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட பெண்கள் அகதிகள் முகாம்களில் சுகாதாரம் இன்றி படுக்க வைக்கப்பட்டிருப்பதை நான் நேரில்பார்த்த போது நெஞ்சு கனத்தது.

பல இன்னல்களைச் சந்தித்துவிட்டு தமிழகத்துக்கு வந்திருக்கும் அகதிகள்மிகுந்த சோர்வுடன், உடல் நலமின்றியும் இருக்கும் இந்த வேளையில் எவ்வித முன் பரிசோதனையும் இல்லாமல் குடும்பக் கட்டுப்பாடு செய்வது வேதனைக்குரிய விஷயமாகும். குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்ட பெண்களுக்கு வயது 20 லிருந்து 25 வரை தான் இருக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மல்லிகை விற்பனையாகின்றது

டிசம்பர் இதழ் வெளிவந்து விற்பனையாகின்றது. துர்க்கா துரந்தரியின் உருவத்தை அட்டையில் தாங்கி வெளிவந்துள்ளது இந்த இதழ். எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். தொடர்ந்து வாசியுங்கள். விலை ரூபா 6/- (சி-5580)

### நாற்றுக் கன்றுகள்

எம்மிடம் சிறந்த இன விதை எலுமிச்சை, ஒட்டுத் தோடை, ஒட்டு எலுமிச்சை மா, பலா நாற்றுக்கன்றுகள் விற்பனைக்கு உண்டு. ஐம்பது நாற்றுகளுக்கு மேல் தொகையாக எடுப்பவர்களுக்கு கழிவு உண்டு. சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி/5584)

### 1990 (O/L) கணிதம்

1990 இல நடைபெற்ற O/L கணிதப் பரீட்சை வினாத்தாள்களும், விடைகளும், வேறு பயிற்சிகளும் அடங்கிய ஆசிரியர் சச்சிதானந்தனின் மயூரதி வெளியீடுகள் விற்பனையாகின்றன. பூபாலசிங்கம், துர்க்கா ஸ்ரேசனர்ஸ் சுன்னாகம். (14912)

### A/L கணக்கியல் நூல்கள்

1. கம்பனி முடிவுக் கணக்குகளும் பகுப்பாய்வும், 2. கம்பனிக் கணக்குகள். ஆக்கம்: க. தங்கராஜா B.Sc. P.F.T. Sp, Dip-in-ED. யாழ் நகர், நல்லூர் புத்தகசாலைகளில் தொகையாக வாங்குவோர்க்கு விசேட கழிவு உண்டு [14911]

### வைத்திய சேவை

S. P. சாமி அன் கொம்பனி சென்றல் கிளினிக் [வைத்திய நிபுணர்கள் ஆலோசனை நிலையம்] புதன்கிழமை [2-1-91] முதல் பழைய கட்டடத்திற்கு அருகாமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 193 A, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். [15340]

சம்பந்தன் வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் ஆலோசனை நிலையம் [யாழ். ஆஸ்பத்திரி, பூபாலசிங்கம் புத்தகசாலை முன்பாக, சாந்தி தியேட்டர் அருகே] முன்பு நடைபெற்ற இடத்தில் வழமைபோல் நடைபெறுகின்றது. [15295]

### A/L இரசாயனம்

108 Brown Road, A/L 91, ஆசிரியர் சத்தீஸ் சேதன பௌதிக இரசாயனம் ஆரம்பம் 5 - 1 - 91 சனி 2. P. m, சனி, ஞாயிறு 2 - 3 P. m வாயு விதிகள், 3 - 3. 45 P. m சேதன இரசாயனம். [15355]

### ஆங்கில வகுப்பு

இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆங்கில வகுப்பு மீண்டும் 5 - 1 - 1991 சனி காலை 11.00 மணிக்கு 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடத்தில் ஆரம்பமாகும். ஆசிரியர் [15329]

### புதிய வகுப்புக்கள்

புதிய கல்வி நிலைய புதிய வகுப்புக்கள் 05 - 01 91 சனி பி. ப 3. 00 மணிக்கு 219 நாவலர்வீதி, (யுப்பிற்றர் வீடியோ சென்ரர் முன்பாக) யாழ்ப்பாணம். ஆரம்பமாகவுள்ளன ஆண்டு 4 தொடக்கம் ஆண்டு 11வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படவுள்ளன. ஏனைய விவரங்கட்கு நேரில்: (15361)

### சேவை

தமிழ், ஆங்கில, தட்டச்சு றோணியோ வேலைகள், தட்டச்சுப் பயிற்சி வகுப்புக்கள் மும்மொழியிலும் மொழி பெயர்ப்பு, வாசகப் பிரியர்களுக்கு வாடகைப் புத்தகங்கள், தலைச்சோடனைகள் விபரங்கட்கு:- நீதினி Q, பஸ் நிலையம் முன்பாக, சுன்னாகம். [15343]

### பயிற்சி நெறிகள்

★ Radio, T. V and Deck
★ Motor Mechanism
★ Motor Winding
★ House Wiring

வகுப்புக்கள் ஆரம்பம் 5 - 1 - 1991 துரித பயிற்சி நெறிகள், இலகு விளக்கமும், செய்முறைப் பயிற்சியும் அடங்கியது. தொடர்பு;- North Ceylon Technical Institute14 st. Peter's Lane Jaffna. (C/5572)

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் Y.M C.A. கட்டடத் தொடரில் ஒரு கடை வாடகைக்கு உள்ளது. விவரங்களுக்கு; பொதுச் செயலாளர், Y. M. C A. யாழ்ப்பாணம். [சி 5581]

# நன்றி நவிலல்



தோற்றம்:
24 - 07 - 1904

மறைவு:
03 - 12 - 1990

## அப்பாக்குட்டி செல்லப்பா

எமது அன்புத் தந்தையரின் ஈமக்கிரியை, அந்தியேட்டி, சபிண்டீகரணம் ஆகிய கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், உதவி புரிந்த அனைவருக்கும எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை. (15202)

# விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

O/L இறுதி பிரிவு 5

## DAY CLASSES

ஆரம்பம்: 07 - 01 - 1991 [8.30 — 1.30]

பிரிவு 3

## EVENING CLASSES

ஆரம்பம்: 09 - 01 - 1991 [2.30 — 5.15]

## SAT, SUN CLASSES

ஆரம்பம்: 05 - 01 - 1991 [2.15 — 5.15]

O/L Dec. ஆண்டு 6, 7, 8, 9, 10 [2.30 - 5.15]

புதிய பிரிவுகள்ஆரம்பம்: 09 - 01 - 1991

மு.குறிப்பு:
i கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்.
ii O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படும்.
iii விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும். [சி-5592]

THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

O/L Dec. 90ல் நடைபெற்ற பரீட்சை வினாத்தாள் தொகுதி விற்பனைக்கு உண்டு

1991 ல் நடைபெறவுள்ள O/L விசேட பரீட்சைக்கான பகல் முழுநேர வகுப்பு ஜனவரி 07ல் ஆரம்பம் [15360]

விண்ணக இன்பத்தின்

# 1ஆம் ஆண்டு நிறைவு



மலர்வு:
12-12-1916

உதிர்வு:
05-01-1990

## யோவாம்பிள்ளை ஆசீர்வாதம்

ஓர் ஆண்டு ஓடி மறைந்ததுவே
எங்கள் அன்புத் தெய்வமே
ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
அழியாத காவியமாய், கலையாத ஓவியமாய்,
உம் அன்புருவம் எம்மை விட்டு,
நீங்காது நிலைத்திருப்பாய் — எங்கள்
நினைவில் இனிதாக

உமதான்மா இறையடி சேர்ந்து இளைப்பாற இறை அருள் வேண்டுகின்றோம்.

இவரது ஆன்மசாந்திக்காக போயிட்டி ஊர் அமாத கோவிலில் 08 - 01 - 1991 சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியில் அனைவரையும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இவரது பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை,
உறவினர்கள்.

இளவாலை. (15364)

# A/L 91 -- A/L 92

| | | | |
|---|---|---|---|
| Che. | — திரு. மகாதேவா | Econ. | — திரு. உதயன் |
| Phy. | — திரு. கணேசன் | Com. | — திரு. Joy |
| Bot. | — திரு. ஸ்ரீகரன் | Acc. | — திரு. Sam |
| Zoo. | — திரு. தேவா | Log. | — திரு. ராஜன் |
| Pure | — திரு. மகேஸ்வரன் | Tam. | — திரு. திருஞானம் |
| App | — திரு. மகேஸ்வரன் | Po Sci. | — திரு. ஜெயகாந்தன் |

★ மாணவர்கள் தாம் விரும்பிய பாடங்களைத் தெரிவு செய்து கற்கலாம்.

ஆரம்பம்:- 5 — 1 — 91

## BOND INSTITUTES

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [14896]

# PATRICIAN INSTITUTES

## தொழில்நுட்ப பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்

பின்வரும் பயிற்சி நெறிகள் எதிர்வரும் 07 - 01 - 1991 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகின்றன.

1. Computer Programming in Basic Language and Disk Operating System (3 Months)
2. City and Guilds of London Institute Quantity Surveying (Part I) (6 Months)
3. Short hand and Typing
   தட்டெழுத்தும், சுருக்கெழுத்தும் (6 Months)
4. Electrical Wiring
   மின்சார இணைப்பு (3 Months)
5. Motor Mechanism
   மோட்டர் மெக்கானிசம் (6 Months)
6. Motor Winding
   மோட்டார் வைண்டிங் (4 Months)
7. Arc Welding
   மின் ஒட்டு வேலை (3 Months)
8. Lathe Operation
   கடைச்சல் இயந்திர இயக்கம் (3 Months)

✶ பழைய பிரிவுகளும் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மேலதிக விபரங்கட்கு:

பதிவாளர்:
பற்றிசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்,
59, செண்.பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

Registrar
Patrician Institute of Higher Studies.
59 St Patrick's Road.
JAFFNA. [சி/5597]

# Science Academy

NALLUR.

## ஆண்டுகள் 9, 10, 11

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | - இரா. | செல்வவடிவேல் |
| கணிதம் | - திரு. | வாமதேவன் |
| ஆங்கிலம் | - திரு. | தேவா |
| தமிழ் | - திரு. | கதிர்காமத்தம்பி |
| வர்த்தகம் | - திரு. | ஜீவா |
| சமூகக்கல்வி | - திரு. | திருக்குமார் |

★ ஏனைய பாடங்களும் நடைபெறும். ★

ஆரம்பம்: 05 - 01 - 1991

(15357)

## In Loving Memory

OF

VICTOR S. KIRUPARAJ

Born: 25 - 6 - 1926 Departed: 4 - 1 - 1990

Those we hold most dear
Never truly leave us
They live on in the kindness they showed
The comfort they shared
And the love they brought into our lives
Fondly remembered and sadly missed

By
Indrani and Children.

71, Racca Road, Jaffna. (15362)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 392/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 4 - 1 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org